நிறுத்தி விடுவார்கள் என்று கருதுகிறேன். அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் சட்டம், ஒழுங்குப்பிரச்னே வந்தால், அதை எப்படிப் பாதுகாக்க வேண்டுமோ அப்படிப் பாதுகாக்க நம் அலுவலர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று அரசாங்கத்தின் சார்பில் உறுதி கூறிக்கொள்கிறேன். அப்படி நடவடிக்கை எடுக்கும்போது "ஐயையோ, நடவடிக்கை எடுக்கிருர்களே" என்று இந்தப் பிரச்னேயை பேசுபவர்கள் அதையும் பேசாமல் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புத் தருவார்கள் என்றும் அரசாங்கம் நம்புகிறது. இந்தப் பிரச்னேயைப் பொறுத்த அளவில், இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லே என்ற என் கருத்தை அரசாங்கத்தின் சார்பில் சொல்லிக்கொள்கிறேன்.

Mr. CHAIRMAN : In view of the statement made by the Hon. the Minister for Industries and since the matter sought to be discussed involves nothing more than the ordinary administration of law, I withhold my consent for raising the matter.

6. துணைத் தலைவர்கள் குழுப் பட்டியல்

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: இந்திய அரசியலமைப்பின்படி, சட்ட மன்ற மேலவையின் நாற்பத்திரண்டாவது கூட்டத் தொடருக்கான மேலவைத் துணைத் தலைவர்கள் பட்டியலின் உறுப்பினர்களாக கீழ்க்காணும் சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களே தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின்கீழ் நான் நியமித்துள்ளேன் என அறிவிக்கிறேன் :---

1. திரு. ஏ. பி. ஜனர்த்தனம்.
2. திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு.
3. திரு. ஜி. சுவாமிநாதன்.
4. திரு. எம். ஆறுமுகசாமி.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(2) ஆகஸ்டு 14-ம் தேதி நடுநிசிக் கூட்டம் குறித்து.

திரு. கே. ராஜாராம்: தலேவர் அவர்களே, இடையில் 14-ம் தேதி அன்று இரு சபை உறுப்பினர்களுடைய கூட்டுக் கூட்டம் நடைபெறும் என்று பத்திரிகையில் படித்தோம். அதுபற்றி இதுவரை உறுப்பினர்களுக்கு அறிவிக்க

[திரு. கே. ராஜாராம்] [1972 ஆகஸ்டு 9

வில்லை. ஊருக்குப் போய்விட்டு மீண்டும் 18-ம் தேதிதான் திரும்புவார்கள் இடையில் 14-ம் தேதி வரவேண்டியிருந்தால், இன்று அறிவித்துவிடுவது நலம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 14-ம் தேதி இரவு 12 மணி அளவில் இரண்டு சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூட்டம் மேதகு ஆளுநர் அவர்களுடைய தலைமையின் கீழே நடைபெறும். எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டு பேசும்படியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மறுபடியும் 14-ம் தேதி வந்து, மறுபடியும் 18-ம் தேதி கூடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்போது சட்டமன்றப் பேரவையிலே நிறைவேற்றப்படும் மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டதற்குப் பிறகுதான் அவை இங்கே வந்து எடுத்துக் கொள்ளப்படும். 14-ம் தேதி மற்றும் 18-ம் தேதி வந்துவிட்டுப் போவதற்கான அளவிலே பிரயாணப் படி முதலானவற்றைப்பற்றி 'பிசினஸ் அட்வைசரி கமிட்டி'யிலும் குறிப்பிட்டார்கள். அதுபற்றி தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று உறுதி தந்திருக்கிற காரணத்தினால், அந்த முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU G. SWAMINATHAN : May I know whether there will be a meeting of the Council and the Legislative Assembly or a general meeting? Or, is it going to be a public meeting?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இரண்டு சபைகளுடைய கூட்டமல்ல. இரண்டு சபைகளைச் சேர்ந்த உறுப்பினர் களுடைய கூட்டம்.

MR. CHAIRMAN : It is not a meeting of the two Houses. It is an ordinary meeting of the Members of the two Houses presided over by the Governor.

THIRU K. S. ABDUL WAHAB : May I know whether an Agenda will be sent to the Members?

THIRU K. RAJARAM : Yes, it will be sent.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS